பக்கங்கள்: 06
காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 ஆடி 02 திங்கட்கிழமை 18.07.2022 கதிர் 144

## மின்வெட்டு அதிகரிக்கும்?

தற்போது நிலவும் எரிபொருள் நெருக்கடியைக் கருத்தில் கொண்டு டீசல் பற்றாக்குறையால் பல மின் உற்பத்தி நிலையங்களில் மின் சார உற்பத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை, மின் உற்பத்தி நிலையங்களுக்கு Furnace Oil இன்னும் இரண்டு நாள்களுக்குப் போதுமானதாகவே இருக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.

☞2

# நாடு முழுவதிலும் அவசரகால நிலை

## ஜனாதிபதி தேர்வை ஒட்டிப் பிரகடனம்


**கொழும்பு,ஜூலை18**

**புதிய ஜனாதிபதி ஒருவரைத் தேர்வு செய்வதற்கான நடவடிக்கைகளில் நாடாளுமன்றம் நாளையும் மறுதினமும் ஈடுபட இருக்கையில் அதற்குத் தோதான சூழலை ஏற்படுத்தும் நோக்கில் நாடு முழுவதிலும் இன்று முதல் பொது ஜன பாதுகாப்பு சட்டத்தின் கீழ் அவசர கால நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.**

☞2



## ரணிலுக்கு எதிராக நேற்று நீர்கொழும்பில் கவனயீர்ப்பு



பதில் ஜனாதிபதியான ரணில் விக்கிரமசிங்க பதவி விலக வேண்டும் என வலியுறுத்தி நீர்கொழும்பில்

☞2

## ரணிலை விலக்க நாளை பெரும் போராட்ட முஸ்தீபு



பதில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை பதவி விலகுமாறு

☞2

## மனோ கணேசன் அணியின் முடிவும் நாளை மாலைதான்



தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைமைக்குழு நாளை செவ்வாய்கிழமை 19 ஆம் திகதி மாலை 6 மணிக்கு

☞2

## எந்த வேட்பாளருக்கு இ.தொ.கா. ஆதரவு?

### நாளை இறுதி முடிவு என்கிறார் செந்தில்



இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், எந்த ஜனாதிபதி வேட்பாளருக்கு ஆதரவளிப்பது என்பது தொடர்பில் இதுவரை இறுதித் தீர்மானம் எடுக்கவில்லை.

- இவ்வாறு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான்

☞2

## இளவாலை கொள்ளை; 2 சந்தேகநபர்கள் கைது

இளவாலை - பண்டத்தரிப்பு பற்றிமாதேவாலயத்திற்கு அருகில் உள்ள வீடொன்றினுள் நேற்று அதிகாலை வேளை வீடு புகுந்து கொள்ளையில் ஈடுபட்ட முகமூடிக் கொள்ளை சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தக் கொள்ளையர்கள் வீட்டாரை கத்தி முனையில் மிரட்டி அவர்களிடம் இருந்து 20 பவுண் தங்க நகைகளை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் இளவாலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்ட

☞2


## வியாழன் முதல் பாடசாலைகள் இயங்கும்

நாட்டில் நிலவும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக பாடசாலை விடுமுறைகள் ஜூலை 18 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் வியாழக்கிழமை (21 ஆம் திகதி) முதல் பாடசாலைகள் திறக்கப்படும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

## முஸ்லிம் காங்கிரஸ் திரிசங்கு நிலையில்

### இன்னமும் முடிவில்லை என்கின்றார் கட்சியின் பொதுச்செயலர் காரியப்பர்



புதிய ஜனாதிபதித் தேர்வு இடம்பெறும்போது எந்த வேட்பாளருக்கு ஆதரவளிப்பது என்பது தொடர்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இதுவரை இறுதி முடிவு எடுக்கவில்லை.

- இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின்

☞2

## காலியில் ரயில் - கார் மோதி விபத்து கர்ப்பிணி உட்பட அறுவர் படுகாயம்!

காலி - மாகல்ல அனுலாதேவி பெண்கள் கல்லூரிக்கு அருகில் இன்று (திங்கட்கிழமை) காலை காரொன்று ரயிலுடன் மோதி விபத்துக்குள்ளானதில் 6 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்த விபத்தில் காரில் பயணித்த கர்ப்பிணி பெண் மற்றும் இரண்டு சிறு பிள்ளைகள் உட்பட 6 பேர் காயமடைந்து கராப்பிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களில் இருவரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

திருமண நிகழ்வொன்றில் கலந்துகொண்டு வீடு

☞2



## 50 கண்ணீர்ப்புகைக் குண்டுகளை சுருட்டியவர் மாட்டிக் கொண்டார்!

கண்ணீர்ப்புகை குண்டுகள் ஐம்பதைத் தன்வசம் வைத்திருந்த நபர் ஒருவர் நேற்றைய தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.


வெலிகட பொலிஸாரால், ஒபேசேகரபுர, நாணயக்கார மாவத்தையில் வைத்து சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவரிடம் முன்னெடுத்த விசாரணைகளுக்கு அமைய பொரளை - கோதமி பிரதேசத்திலுள்ள வீடொன்றிலிருந்து இந்தக் குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன.

இந்த மாதம் 13ஆம் திகதி இரவு, வெலிகட பொலிஸ் பிரிவின்

☞2




## இலங்கையில் அமைதியான முறையில் தீர்வு காண புனித பாப்பரசர் வலியுறுத்து



இலங்கையில் பொதுமக்களின் கௌரவத்தையும் உரிமையையும் மதித்து அமைதியான முறையில் தீர்வு காண வேண்டும் என்று புனித போப்பாண்டவர் முதலாம் பிரான்ஸிஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் நிலவி வரும் மோசமான நிலைமைகள் குறித்து நேற்றைய தினம் வத்திக்கான் சென் பீட்டர்ஸ் தேவாலயத்தில் நடைபெற்ற ஏஞ்சலஸ்

☞2

## நாடு முழுவதிலும் ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதில்ஜனாதிபதியாக பதவியேற்றிருக்கும் ரணில் விக்கிரமசிங்கவை அப்பதவியில் இருந்து அகற்றவும், அவர் புதிய ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படுவதை தடுக்கவும் இலக்காகக் கொண்டு பல்வேறு எதிர்ப்பு நடவடிக்கைகள் நாட்டில் அறிவிக்கப்பட்டுள்ள சூழலில் இந்த அவசர கால நிலை பிரகடனம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இன்று முதல் நாடளாவிய ரீதியில் அவசரகால நிலையை பிரகடனப்படுத்தி விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி,பொது பாதுகாப்பு, பொது ஒழுங்கைப் பாதுகாத்தல் மற்றும் பொது வாழ்க்கைக்கு அத்தியாவசியமான சேவைகள் மற்றும் விநியோகங்களைப் பேணுதல் என்பவற்றுகாக அவசரகால நிலை அவரால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

நாடாளுமன்றத்தைச் சுற்றிப் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும், அனைத்து நுழைவாயில்களும் வீதித் தடைகள் போட்டு மூடப்பட்டுள்ளதாகவும் செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, நாளுமன்றம் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நாளை காலை 10.00 மணிக்கு கூடவுள்ளது.

நாட்டில் தற்போது நிலவும் அரசியல் நெருக்கடி காரணமாக ஜனாதிபதியை நியமிப்பதற்கான வேட்புமனு தாக்கல் நாளை நடைபெறவுள்ளது.

இது தொடர்பான வாக்கெடுப்பு நாளை மறுதினம் நாடாளுமன்றத்தில் இரகசிய வாக்கெடுப்பாக நடைபெறவுள்ளது.

இதற்கிடையில் -

ஜனாதிபதியைத் தெரிவு செய்வதில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் சுதந்திரமாக வாக்களிக்கும் உரிமைக்கு மாறாக, சமூக வலைத்தளங்கள் ஊடாக செல்வாக்கு செலுத்துபவர்கள் தொடர்பில் விசாரணை நடத்துமாறு பதில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

சமூக ஊடகங்கள் ஊடாக விடுக்கப்படும் அச்சுறுத்தல்களினால் சுதந்திரமாக வாக்களிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் விடுத்த அறிவித்தலை கருத்திற்கொண்டு பதில் ஜனாதிபதி பாதுகாப்பு தரப்பினருக்கு இந்தப் பணிப்புரையை விடுத்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி, நாடாளுமன்ற அதிகாரங்கள் மற்றும் சிறப்புரிமைகள் சட்டம் மற்றும் அது தொடர்பான குற்றவியல் சட்டங்களின் கீழ் இது தொடர்பான சம்பவங்களை விசாரிக்குமாறு அவர் அறிவித்துள்ளார்.

## இளவாலை கொள்ளை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையில், விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், 20, 21 வயதான இருவரைக் கைது செய்துள்ளனர்.

இவர்கள் இருவரும் போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள் எனவும் , மேலதிகவிசாரணைகளை அவர்களிடம் முன்னெடுத்து வருவதாகவும் இளவாலை பொலிஸார் தெரிவித்தனர்.

## எந்த வேட்பாளருக்கு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் கட்சி உறுப்பினர்களுடன் கலந்துரையாடி நாளை 19ஆம் திகதி இறுதி முடிவு எடுக்கப்படும் என்றும் அவர் மேலும் கூறினார்.

## காலியில் ரயில் - கார் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திரும்பியபோதே கார் இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது. எச்சரிக்கை சமிக்ஞைகள் வழங்கப்பட்ட போதிலும் கார் ரயில்கடவைக்குள்நுழைந்ததாகவிபத்தை நேரில் பார்த்த ஒருவர் தெரிவித்தார்.

சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## முஸ்லிம் காங்கிரஸ் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொதுச்செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி நிஸாம் காரியப்பர் தெரிவித்தார்.

பொது எதிர்க்கட்சி என்ற அடிப்படையில், எங்களுக்குள் பேச்சு நடத்தி எடுக்கின்ற ஒருமித்த முடிவுடன் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இருக்கும் - என்றும் அவர் மேலும் கூறினார்.

## 50 கண்ணீர்ப்புகைக் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற சுற்றுவட்டப் பகுதியின் பொலிதுவ சந்திக்கு அருகில் இடம்பெற்ற எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் போது, ஓட்டோவில் கண்ணீர்ப்புகை குண்டுகளுடன் சம்பவஇடத்துக்குசென்றுகொண்டிருந்த பொலிஸார் இருவரைத் தாக்கி, அவர்களிடம் இருந்த கண்ணீர்புகை குண்டுகளை சந்தேகநபர் பறித்துச் சென்றுள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சந்தேகநபரை இன்று நீதிமன்றில் முன்னிலைப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## இலங்கையில் அமைதி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிகழ்ச்சியில் பேசிய போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

ஏழைகளுக்கு ஆதரவாகத் தாம் பிரார்த்தனை செய்கிறார் எனவும் அவர் உறுதியளித்துள்ளார்.

இதற்கு முன்னர் ஆட்சியில் இருந்தவர்களால் ஏற்பட்ட ஊழல் மோசடிகள், தவறான பொருளாதார முகாமைத்துவம் போன்றவற்றுக்கு உடனடி தீர்வு காண்பதற்காக அனைத்து தரப்பினரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டுமெனவும் அவர் கோரியுள்ளார்.

அதேவேளை, அனைத்து தரப்பினரதும் உரிமைகளை மதிக்கும் வகையில் அமைதியான முறையில், வன்முறைகளைத் தவிர்த்து பேச்சு மூலம் பிரச்சினைகளுக்கு தீர்வு காணுமாறும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

## மனோ கணேசன் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு நுகேகொடை ஏகநாயக அவனியுவில்அமைந்துள்ள கட்சிச்செயலகத்தில் கூடி,டுத்த நாள் 20 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட வேட்பு மனுக்கள் சமர்ப்பித்துள்ள அனைத்து வேட்பாளர்கள் தொடர்பிலும், கலந்துரையாடி முடிவெடுக்கும் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் எம்.பி. ஊடகங்களுக்கு தெரிவத்துள்ளார்.

## ரணிலை விலக்க ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வலியுறுத்தி நாளை தீவிர போரட்டமொன்று முன் னெடுக்கப்பட உள்ளதாக பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே தெரிவித்துள்ளார்.

இதன்படி, அண்மைய நகரங்களில் போராட்டங்களை முன்னெடுக்குமாறு அவர் பொது மக்களை கேட்டுக்கொண்டுள்ளார்.

ரணில் விக்கிரமசிங்கவை பதில் ஜனாதிபதி பதவியில் இருந்து நீக்குவதற்கு தொழிற்சங்கங்கள் மற்றும் வெகுஜன அமைப்புகள் பாரிய நடவடிக்கைகளை முன்னெடுப்பதுடன், போராட்டத்தினை வெற்றியுடன் நிறைவு செய்ய முடியுமெனவும் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே தெரிவித்துள்ளார்.

## ரணிலுக்கு எதிராக ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று மாலை 6 மணி அளவில் நீர்கொழும்பு 'கோட்டா கோ கம' கிளையின் முன்பாக நீர்கொழும்பு தெல்வத்தை சந்தியில் கவனவீர்ப்பு நிகழ்வு ஒன்று இடம்பெற்றுள்ளது.

அதில் ஈடுபட்டோர் சுலோக அட்டைகளை ஏந்தியிருந்தமையுடன் எதிர்ப்புக் கோஷங்களையும் எழுப்பினர்.

ஜனாதிபதிப் பதவியை ஏற்காது ரணில் விக்கிரமசிங்க பதவி விலக வேண்டும் என வலியுறுத்தி இந்தக் கவனவீர்ப்பு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

## மின்வெட்டு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதே நிலை நீடித்தால் மின்வெட்டு காலத்தை அதிகரிக்க வேண்டிய நிலை ஏற்படும் என சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் எச்சரித்துள்ளன.

விளம்பரத் தொடர்புகளுக்கு – தொலைபேசி இலக்கம்– 076 443 8622

## மரண அறிவித்தல்



### அமரர் ந .சிவசோதி

காரைநகரை பிறப்பிடமாகவும் பிரான்ஸை வதிவிடமாகவும் கொண்ட ந .சிவசோதி அன்னார் காலஞ் சென்றவாகளான நடராசா நாகேஸ்வாயின் மகனும் இராசபூபதி பராசமணி தம்பதியின் அன்பு மருமகனும் இதயராணியின் அன்பு கணவரும் ஜீவித், தனுசா, யுகிர்தாவின் அன்புத் தந்தையும் செம்பச்சோதி , அருட்சோதியின் அன்பு சகோதரனும், ரவீந்திரன், புவனேந்திரன், சிறீகாந், சிறீரஞ்சனியின் அன்பு மைத்துனரும் ஆவார் . அன்னான் இறுதிக் கிரியை பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும் .

**தொடர்புகளுக்கு :**

புவனேந்திரன் : 0033761194666
ரவீந்திரன்: 0764732124
செம்பச்சோதி : 0033641861514

தகவல்
குடும்பத்தினர்.



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## மாறாப் பண்பியல்பு

நாடு மிகப்பெரும் நெருக்கடிக்குள் – சிக்கலுக்குள் – மூழ்கிக் கிடக்கின்றது. அதிலிருந்து நாடு மீளும் என்று நம்பிக்கை தரும் ஒளிக்கீற்று வெளிப்படுவதாக இல்லை.

இந்தச் சமயத்தில் நெருக்கடியை தீவிரப்படுத்தி, இன்னும் குழப்பங்களை ஏற்படுத்தி, களேபரங்களை உருவாக்கி, மேலும் மோசமான நிலைக்குள் நாட்டை மூழ்கடிக்கும் சந்தர்ப்பமாக இப்போதைய ஜனாதிபதித் தேர்தல் அரங்கேற போகின்றது எனப் பல தரப்புகளும் அச்சம் வெளியிடுகின்றன.

இப்போதைய எஞ்சிய காலத்துக்கான ஜனாதிபதித் தெரிவு, அதைத் தொடர்ந்து இடைக்கால அரசின் பிரதமர் மற்றும் அமைச்சரவை தேர்வு போன்றவற்றால் பெரும் முரண்பாடு ஏற்படும் சூழல் ஏற்பட்டு இருக்கின்றமையை நியாயமான தேர்தலுக்கான அமைப்பான 'பவ்ரல்' சுட்டிக்காட்டி உள்ளது. நாட்டின் இன்றைய தேசிய நெருக்கடி நிலையை முகம்கொண்டு, மீண்டெழுவதற்காக ஒற்றுமையுடன் செயல்படுமாறு நாடாளுமன்றக் கட்சிகளை அந்த அமைப்புக் கோரி இருக்கின்றது.

புதிய ஜனாதிபதி மற்றும் பிரதமரைத் தெரிவு செய்யும் செயற்பாட்டில் – நடவடிக்கையில் – பிளவுகளை மேலும் உருவாக்கி வாக்கெடுப்புக்குச் செல்ல வேண்டாம் என்று அந்த அமைப்பு சம்பந்தப்பட்ட வட்டாரங்களிடம் கோரிக்கை முன்வைத்திருக்கின்றது.

ஆனால் அந்தக் கோரிக்கை 'செவிடன் காதில் ஊதிய சங்காக' – 'எருமை மாட்டில் பெய்த மழையாக' அவமாகிப் போகும் என்பது நிச்சயம்.

அந்த அமைப்பு சுட்டிக்காட்டுகின்றமை போல நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார, அரசியல் மற்றும் சமூக ஸ்திரமின்மையை இன்னும் புரிந்து கொள்ளாத மக்கள் பிரதிநிதிகளே நம் மத்தியில் உள்ளனர் என்பதுதான் விசனத்துக்குரிய உண்மை.

'இந்த தருணத்தில் அனைவரும் ஒன்றிணைந்து செயல்படவில்லை என்றால் அரசியல்வாதிகளான நீங்களும், குடிமக்களாகிய நாங்களும் எல்லா அழிவுகளையும் நோக்கி இழுக்கப்படுகின்றமையை யாராலும் தடுக்க முடியாது' – என்ற யதார்த்தத்தை, கட்டாய நிலைமையை, வெளிப்படுத்தி உள்ளது அந்த அமைப்பு.

இன்றைய நெருக்கடியின் தாற்பரியத்தை புரிந்து கொண்டு, அதை வெற்றிகரமாகத் தாண்டுவதற்கான சில அடிப்படைகளை 'பவ்ரல்' சுட்டிக்காட்டி இருக்கின்றது. அவை கவனத்தில் கொள்ளப்பட வேண்டியவை.

நாடாளுமன்ற ஆசனங்களின் எண்ணிக்கை என்ற அட்சர கணிதத்தை வைத்துக் கொண்டு அரசியல் சித்து விளையாட்டு நடத்தி, நாட்டை மேலும் கேள்விக்கு உள்ளாக்காதீர்கள் என்பதுதான் அது சுட்டிக்காட்டியுள்ள விடயத்தின் உட்பொருள்.


ஜனாதிபதி, பிரதமர், அமைச்சரவை உறுப்பினர்களைத் தேர்வு செய்யும் போது நாடாளுமன்றத்தில் அந்தந்த அரசியல் கட்சிகளின் எண்ணிக்கைப் பெரும்பான்மையை மட்டும் கருத்தில் கொள்வதை தவிர்க்கவும் என்று அந்த அமைப்பு கூறி இருக்கின்றது.

அதாவது, அரசியல் கட்சிகள், கூட்டணிகள், சார்பு நிலைக் குழுக்கள் என்று பிரிந்து நிற்காமல், முழு நாடாளுமன்றத்தையும் ஓர் அரசியல் கூட்டணி போல ஒன்று பட்டுச் செயல்பட வேண்டும் என்று அந்த அமைப்பு கூறுகிறது.

இது, காலத்தின் கட்டாயம்; விதிப்பு. ஆனால் அதை மீறிக் குழம்பித்தான் – குழப்பித்தான் – செயல்படும் நமது அரசியல் முறைமை. அதுவே இலங்கை தேசத்தின் தலைவிதி. மாற்றவே முடியாத துரதிஷ்டம்.

# ஜனாதிபதி தெரிவு வாக்களிப்பு தொடர்பில் எம்.பிக்களுக்கு கொலை மிரட்டல் விடுப்பு!

## விசாரணை மேற்கொள்ளுமாறு பதில் ஜனாதிபதி அதிரடி உத்தரவு



தேர்தலின் போது சுதந்திரமாக தமது வாக்குகளைப் பயன்படுத்துவதற்கு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு காணப்படும் உரிமைக்கு இடையூறு விளைவித்து, சமூக வலைத் தளங்கள் ஊடாக அழுத்தம் பிரயோகிக்கும் நபர்கள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்குமாறு பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாதுகாப்புத் துறையினருக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு காணப்படும் அதிகாரங்கள் மற்றும் சிறப்புரிமைகள் தொடர்பான சட்டம் உட்பட , அதனுடன் தொடர்புடைய குற்றவியல் சட்டத்தின் அடிப்படையிலும் உரிய விசாரணைகளை முன்னெடுக்குமாறும் பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாதுகாப்பு தரப்பினருக்கு வழங்கியுள்ள ஆலோசனையில் குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் அதிகாரங்கள் மற்றும் சிறப்புரிமைகள் சட்டத்தின் கீழ் , அவர்கள் நாடாளுமன்றத்துக்கு வருவதற்கும் , திரும்பிச் செல்வதற்கும் சுதந்திரம் காணப்படுவதாகவும் , நாடாளுமன்றத்துக்குள்ளும் சுதந்திரமாக செயற்படுவதற்கு வாய்ப்பளிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதற்கு எதிராக செயற்படுகின்றமை நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமையை மீறுவதுடன் அச்சுறுத்தலாகவும் அமையும் என பதில் ஜனாதிபதி வழங்கிய ஆலோசனையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வன்முறையைப் பரப்பும் கலகக்காரர்களால் சமூக வலைத்தளங்கள் ஊடாகக் குறிப்பிட்ட வேட்பாளர்களுக்கு வாக்களித்து விட்டு கிராமத்துக்கு வர வேண்டாம் என்று பதிவிட்டு , அச்சுறுத்தல் விடுக்கப்படுவதாக பதில் ஜனாதிபதிக்கு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இதற்கு முன்னரும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் இல்லங்களுக்கு தீ வைத்து அவற்றை அழித்துள்ளதோடு, நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரும் கொல்லப்பட்டுள்ளார்.

இவற்றை சுட்டிக்காட்டி கலகக்காரர்களால் மறைமுகமாக கொலைமிரட்டல் விடுக்கப்படுவதாகவும் பதில் ஜனாதிபதிக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களிடமிருந்து முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. இவ்வாறு கொலை மிரட்டல் விடுக்கப்படுவதால் தமக்கு நாடாளுமன்றத்தில் சுதந்திரமாக வாக்களிக்க முடியாத சூழல் காணப்படுவதாகவும் பதில் ஜனாதிபதியிடம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

அதற்கமைய இவை தொடர்பில் துரித விசாரணைகளை முன்னெடுக்குமாறு பதில் ஜனாதிபதி பாதுகாப்புத் தரப்பினருக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்காக வாக்களிக்கும் போது , ஒரு நாடாளுமன்ற உறுப்பினரால் பிரிதொருவருக்கு அச்சுறுத்தல் மற்றும் அழுத்தம் பிரயோகிக்கப்பட்டால் , நாட்டில் நடைமுறையிலுள்ள சட்டத்தின் பிரகாரம் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முதலாவது அமைச்சரவை கூட்டத்திலும் தெரிவித்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# சூட்டுக்காயங்களுடன் இறந்து கிடந்த யானை

## உன்னிச்சை பல்லாவிக் குளம் அருகே



மட்டக்களப்பு–ஆயித்தியமலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட உன்னிச்சை பல்லாவிக் குளத்திற்கு அருகாமையில் உள்ள காட்டுப் பகுதியில் சுமார் 20 வயது மதிக்கத்தக்க காட்டு யானை ஒன்று இறந்த நிலையில் நேற்று முன்தினம் மாலை மீட்கப்பட்டதாக, ஆயித்தியமலை பொலிஸார் தெரிவித்தனர். மட்டக்களப்பு வனஜீவராசிகள் திணைக்களத்திற்கு பொது மக்கள் வழங்கிய தகவலையடுத்து மட்டக்களப்பு மாவட்ட சுற்றுவட்டப் பொறுப்பாளர் ஏ.அப்துல் ஹலீம் தலைமையிலான அதிகாரிகளுடன் குறித்த இடத்திற்கு சென்று இறந்த யானையை மீட்டுள்ளனர்.

அந்த யானையின் உடம்பில் சூட்டுக் காயங்கள் காணப்படுகின்றன.

அது இறந்தமைக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லையென வனஜீவராசி திணைக்களத்தின் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

# அமெரிக்காவில் பல்பொருள் அங்காடியில் துப்பாக்கிச் சூடு; 4 பேர் பரிதாகரமாக சாவு

## மர்ம நபரை பொதுமக்கள் சுட்டுக் கொன்றனர்




அமெரிக்காவில் பல்பொருள் அங்காடி ஒன்றில் மர்ம நபர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 3 பேர் உயிரிழந்தனர். இன்டியானா மாகாணத்தில் இருக்கும் க்ரீன்வுட் நகரத்தில் உள்ள பார்க் ஹால் என்ற பல்பொருள் அங்காடி ஒன்றில் நேற்று மாலை மர்ம நபர் ஒருவர் நுழைந்தார். சிறிது நேரம் அங்காடியை நோட்டமிட்ட அவர், திடீரென்று மறைத்து வைத்து இருந்த கைத்துப்பாக்கியை எடுத்து உணவகம் ஒன்றில் அமர்ந்து இருந்த வாடிக்கையாளர்களை நோக்கி சரமாரியாக சுட்டார். குண்டு காயம் அடைந்த பலர் தரையில் விழுந்தனர்.

துப்பாக்கிச் சூடு பற்றி தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார் அங்காடிக்குள் அதிரடியாக நுழைந்தனர். ஆனால் அவர்கள் வருவதற்கு முன்பே ஆயுதம் வைத்து இருந்த பொதுமக்கள் சிலர் மர்ம நபரை சுட்டுக் கொன்றனர். அங்காடியில் இருந்து படுகாயங்களுடன் 5 பேரை மீட்ட இன்டியானா பொலிஸார் மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர். ஆனால் சிகிச்சை பலனின்றி 3 பேர் அடுத்தடுத்து உயிரிழந்துவிட்டனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிருக்கு ஆபத்தான நிலையில் 2 பேருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்படுகிறது. துப்பாக்கிச் சூட்டிற்கான காரணம் குறித்து விசாரித்து வரும் பொலிஸார் கொலையாளியின் படத்தை வைத்து அவரை அடையாளம் காணும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். அமெரிக்காவில் ஆயுத தடைச் சட்டத்தை கடுமையாக்க ஜோ பைடன் அரசு தீவிர நடவடிக்கை எடுத்து வரும் நிலையில், துப்பாக்கிச் சூடு நிகழ்வுகள் தொடர்ந்து நடந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# உக்ரைன் உளவுப்பிரிவு தலைவர் பணியிலிருந்து நீக்கப்பட்டார்

## அதிபர் ஜெலன்ஸ்கி உத்தரவு



உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்து 5 மாதத்தை நெருங்கியுள்ளது. இந்தப் போரில் பொதுமக்கள் உள்பட ஆயிரக் கணக்கானோர் உயிரிழந்துள்ளனர். ரஷ்யாவுக்கு எதிரான போரில் உக்ரைனுக்கு அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் ஆயுதம் உள்ளிட்ட உதவிகளை அளித்து ஆதரவு தெரிவித்து வருகின்றன. உக்ரைனுக்கு ஆதரவு அளிக்கும் வகையில் ரஷ்யா மீது பல்வேறு பொருளாதார தடைகளை மேற்கத்திய நாடுகள் விதித்துள்ளன.

இதனிடையே, உக்ரைனில் ஆக்கிரமித்த பகுதிகளை ரஷ்யா ஆதரவு கிளர்ச்சியாளர்கள் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றியுள்ளனர். இந்நிலையில், உக்ரைன் உளவுப்பிரிவு தலைவர் மற்றும் அரசு பொது வழக்கறிஞர் ஆகியோரை பணிநீக்கம் செய்து அதிபர் விளாடிமிர் ஜெலன்ஸ்கி உத்தரவிட்டுள்ளார். அரசு பொது வழக்கறிஞரின் அலுவலகங்களில் பணியாற்றி வருபவர்கள், உக்ரைன் உளவுப்பிரிவு தலைவர் உள்பட மூத்த அதிகாரிகளை அதிபர் ஜெலன்ஸ்கி பணிநீக்கம் செய்துள்ளார். இந்த இரு பிரிவுகளைச் சேர்ந்த அதிகாரிகள், வீரர்கள் ரஷ்யாவுக்கு ஆதரவாக செயல்பட்டதால் அந்தப் பிரிவுகளின் தலைவர்களை நீக்கியுள்ளார்.

# கிரீஸ் நாட்டில் பயங்கரம்

## 11.5 தொன் வெடிமருந்துடன் விமானம் வெடித்துச் சிதறியது



செர்பியாவில் இருந்து வங்கதேசம் நோக்கி, உக்ரைன் நாட்டின் ஆன்-2 மெரிடியன் சரக்கு விமானம் நேற்று முன்தினம் இரவு சென்று கொண்டிருந்தது. கிறீஸ் நாட்டின் கவாலா சர்வதேச விமான நிலையத்தில் இருந்து 40 கி.மீ. தொலைவில் 2 கிராமங்களுக்கு நடுவே வானில் விமானம் பறந்து கொண்டிருந்த போது, இன்ஜினில் பழுது ஏற்பட்டிருப்பதாக விமானி, கட்டுப்பாட்டு அறைக்கு தகவல் தெரிவித்துள்ளார். அடுத்த சில நிமிடத்தில் அந்த விமானம், தீப்பந்து போல எரிந்தபடி தரையில் விழுந்து வெடித்துச் சிதறியது.

சுமார் 2 மணி நேரம் வரை விமானம் எரிந்து சாம்பலாகி உள்ளது. இந்த விமானத்தில் 11.5 தொன் எடை கொண்ட வெடிமருந்துகள் அனுப்பப்பட்டிருந்தன என செர்பியன் பாதுகாப்பு அமைச்சகம் உறுதி செய்துள்ளது. விமானத்தில் பயணம் செய்த 8 உக்ரைன் நாட்டவர்களும் பலியாகி விட்டனர்.

இந்த விபத்தின் போது பயங்கர வெடி சத்தம் கேட்டதாக கிராமமக்கள் கூறி உள்ளனர். விபத்து நடந்த இடத்திற்கு மக்கள் செல்ல தடை விதிக்கப்பட்டு அங்கு இன்னும் வெடிபொருள்கள் எஞ்சி உள்ளதா வேறு ஏதாவது ஆபத்தான இரசாயனங்கள் இருக்கிறனவா என்பது குறித்து அதிகாரிகள் ஆய்வு செய்கின்றனர்.

விபத்து நடந்த பகுதியின் அருகில் வசிக்கும் மக்கள், ஜன்னல்களை மூடி வைத்திருக்கும் படியும், மாஸ்க் அணிந்திருக்கும் படியும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# பாகிஸ்தான் இடைத்தேர்தலி இம்ரான்கான் கட்சி அபார வெற்றி



*பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்தில் சட்டசபை இடைத்தேர்தல் சமீபத்தில் நடைபெற்றது. காலியாக உள்ள 20 சட்டசபை தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் நடந்தது. காலை 8 மணிக்கு தொடங்கிய வாக்குப்பதிவு மாலை 5 மணிக்கு நிறைவடைந்து, வாக்குகள் எண்ணப்பட்டு நேற்று முடிவுகள் வெளியாகின.*

*இந்நிலையில், சட்டசபை இடைத்தேர்தலில் முன்னாள் பிரதமர் இம்ரான்கான் தலைமையிலான தெஹ்ரிக் இ இன்சாப் கட்சி 16 இடங்களில் அபார வெற்றி பெற்றுள்ளது. சட்டசபை இடைத்தேர்தலில் வெற்றி பெற்ற தெஹ்ரிக் இ இன்சாப் கட்சிக்கு ஆளும் கட்சி தனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டது.*

# போர்க்குற்றவாளியான கோட்டாபயவுக்கு எந்நாடும் அடைக்கலம் வழங்கக் கூடாது

## அம்பாறை மாவட்ட காணாமலாக்கப்பட்டோருக்கான சங்கம் வலியுறுத்து



(பாறுக் ஷிஹான்)

போர்க்குற்றவாளியான முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு எந்த நாடும் அகதி அடைக்கலம் கொடுக்க கூடாது என அம்பாறை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான சங்கம் தெரிவித்துள்ளது.

சங்கத்தின் உறுப்பினர்கள் அம்பாறை மாவட்டம் திருக்கோவில் பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை நடந்த விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு மேற்கண்டவாறு குறிப்பிட்டனர்.

அம்பாறை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சங்க தலைவி தம்பிராசா செல்வராணி தெரிவித்த கருத்து வருமாறு:-

இலங்கையில் இருந்து தப்பி ஓடிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு எந்த நாடும் அகதி அந்தஸ்து கொடுத்து வாழ்வதற்கு இடம்கொடுக்கக் கூடாது. மக்கள் போராட்டத்தின் ஊடாக ஜனாதிபதி வெளியேற்றப்பட்டமையை நாம் வரவேற்கின்றோம். எமது உறவுகளை இந்த ஜனாதிபதி, பிரதமரிடம் தான் கொடுத்துவிட்டு தொலைத்து விட்டுள்ளோம். இறுதி யுத்தத்தின் போது எமது உறவுகளை இவர்களிடம்தான் ஒப்படைத்திருந்தோம். எமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதைதான் அன்றிலிருந்து இன்று வரை கேட்டு இருக்கின்றோம். எமது உறவுகளைக் காணாமல் ஆக்கிய ராஜபக்ஷ குடும்பத்திற்கு எவரும் ஆதரவு அழிக்க வேண்டாம். இன்று எமது உறவுகளை காணாமல் ஆக்கிவிட்டு தற்போது அவர்களும் காணாமல் ஆக்கப்படும் நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள். எமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்ற கேள்விக்கு பதில் கிடைக்காமல் நாம் இருக்கின்றோம். - என்றார்.

அம்பாறை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் சங்க உறுப்பினர் அழகேஸ்வரி தெரிவித்த கருத்து வருமாறு:-

நாங்கள் தற்போது 50 வீதம் ஆனந்தமாகவும் 50 வீதம் கவலையாகவும்தான் இருக்கின்றோம். ஏனெனில் 12 வருடங்கள் நாங்கள் போராடியமைக்கு எவ்வித பலனும் கிடைக்கவில்லை. ஆனாலும் கோட்டாபய துரத்தப்பட்டுள்ளமையால் எமக்கு ஒரு சந்தோசம் உள்ளது. ஆனால் இனியும் அவர்கள் தான் அதிகாரத்துக்கு வருவார்கள் என்ற சந்தேகமும் எமக்குள்ளது. இந்நிலையில் இனியும் எம்மால் போராட முடியாது. வயது சென்று கொண்டு இருக்கின்றது. எதிர்கால ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் எமது விடயத்தில் தலையிட்டு தீர்வினைப் பெற்று தர வேண்டும். - எனக் கேட்டுக்கொள்கின்றேன்.

அம்பாறை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சங்க ஆலோசகர் தாமோதரம் பிரதீபன் தெரிவித்த கருத்து வருமாறு:-

இந்த நாட்டின் ஜனாதிபதி, பிரதமர் சர்வதிகார போக்குடன் தமிழர்களின் பூர்விக இடங்களை அபகரிக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டிருந்தார்கள். இதற்காக செயலணி ஒன்றை உருவாக்கி பல மோசடிகளை மேற்கொண்டிருந்தார்கள். இதன் விளைவாக அம்பாறை மாவட்டத்தின் பொத்துவில் தொடக்கம் பெரிய நீலாவணை வரையிலான தமிழர்களின் பூர்வீக நிலங்கள் பறிக்கப்பட்டிருந்தன. வடகிழக்கிலும் இவ்வாறான நிலைமை தொடர்கின்றது. எனவே இந்த செயற்பாட்டிற்கு மூல காரணமான ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மக்களின் போராட்டத்தினால் நாட்டை விட்டு விரட்டப்பட்டுள்ளார்.

இறுதி யுத்த மனித உரிமை மீறல் செயற்பாட்டில் குற்றஞ்சாட்டப்பட்ட இவருக்கு எந்த நாடுகளும் அடைக்கலம் கொடுக்க கூடாது என்பதை கேட்டுக் கொள்கின்றோம். - என்றார்.

# முஸ்லிம் சமூகத்தின் உரிமைகளைப் பெற ஜனாதிபதி தேர்வைப் பயன்படுத்துங்கள்!

## உலமாக் கட்சித் தலைவர் கல்முனையில் வலியுறுத்து




(நூருல் ஹுதா உமர்)

முஸ்லிம் மக்கள் வாக்குகளை பெற்று நாடாளுமன்ற சுகபோகம் அனுபவிக்கும் முஸ்லிம் கட்சிகள் ஒற்றுமைப்பட்டு புதிய ஜனாதிபதி தெரிவில் முஸ்லிம் சமூகத்தின் சில உரிமைகளையாவது பெற முயற்சிக்க வேண்டுமே தவிர பணம், பதவிகளுக்காக வாக்களிக்கக்கூடாது என ஐக்கிய காங்கிரஸ் கட்சி (உலமா கட்சி) கோரிக்கை விடுத்துள்ளது.

கல்முனை காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் இது பற்றி ஐக்கிய காங்கிரஸ் கட்சித்தலைவர் கலாபூசணம் முபாறக் அப்துல் மஜீத் மௌலவி கருத்து வெளியிட்டார். அங்கு அவர் மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு:-

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆரம்பிக்கப்பட்டு மக்கள் ஆணையை பெற்றது முதல் இன்று வரை அக்கட்சி அரசுக்கும், ஜனாதிபதிகளுக்கும் ஆதரவளிக்கும் போது முஸ்லிம் சமூகத்தின் எந்தவொரு உரிமையையும் முன்வைத்து ஆதரவளித்ததில்லை. அதே போல் ஏனைய மக்கள் காங்கிரஸ், தேசிய காங்கிரஸ் என்பவை கூட முஸ்லிம்களின் உரிமைகளை முன் வைக்காமல் தமக்குரிய பதவிகளை மட்டுமே முன் வைத்து ஆதரவளித்து வந்துள்ளன. எமது உலமா கட்சி மட்டுமே 2005 ஜனாதிபதி தேர்தலின் போது மௌலவி ஆசிரிய நியமனம் வழங்கப்பட வேண்டும் என்ற நிபந்தனையை எழுத்து மூலம் முன் வைத்து அன்றைய ஜனாதிபதி வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷவை ஆதரித்து அதனை வென்றும் காட்டியது.

அதே போல் 2019 தேர்தலிலும் 16 அம்ச கோரிக்கைகளை முன்வைத்து கோட்டாபய ராஜபக்ஷவை ஆதரித்தோம். ஆனாலும் முஸ்லிம் சமூகம் எமது கட்சிக்கு ஆணை தராததால் எமது கோரிக்கைகள் எதையும் கோட்டாவோ பொதுஜன பெரமுனவோ நிறைவேற்றவில்லை. அவர்களின் இத்தகைய மனோநிலை காரணமாக இன்று கேவலமான நிலைக்கு வந்துள்ளனர். ஆகவே முஸ்லிம்களின் வாக்குகளைப் பெற்று நாடாளுமன்றத்தில் இருக்கும் கட்சிகள் முஸ்லிம் சமூகம் எதிர்நோக்கும் சில உரிமைகளையாவது பெற்றுத்தரும் வகையில் பேச்சு நடத்தி ஜனாதிபதி தேர்தலில் வாக்களிக்க முன் வரவேண்டும்.

முக்கியமாக இனப்பிரச்சினைத்தீர்வில் வடக்கு, கிழக்கை இணைக்காத வகையில் முஸ்லிம்களுக்கான சம பங்கு, திகாமடுல்ல மாவட்டத்தை இரண்டாக பிரித்து கல்முனை தேர்தல் மாவட்டம், அம்பாறை தேர்தல் மாவட்டமாகவும் இரண்டு தேர்தல் மாவட்டமாக மாற்றுதல், கல்முனையில் சாய்ந்தமருதுக்கென பிரதேச சபை, பாண்டிருப்புக்கென பிரதேச சபை வழங்கல், அம்பாறை மாவட்ட கரும்புச் செய்கை காணி முதல் முஸ்லிம்கள் பறிகொடுத்த 64 ஆயிரம் ஏக்கர் வரை எமது காணிகளை மீளப்பெறல், கொழும்பிலும் கண்டியிலும் முஸ்லிம் பெண்களுக்கான மேலதிக அரச பாடசாலைகள், விகிதாசார தேர்தல் முறையில் மாற்றம் செய்யாமை, தடை செய்யப்பட்ட முஸ்லிம் இயக்கங்களில் பயங்கரவாதத்தில் நேரடியாக சம்பந்தப்படாத தவ்ஹீத் ஜமாஅத்துக்கள் மீதான தடைகளை நீக்குதல், மட்டக்களப்பு பல்கலையை அரச பிடியிலிருந்து விடுவித்தல் போன்ற முஸ்லிம் சமூகத்தின் தேவைகளை முன் வைத்து இவற்றை பகிரங்கமாக எந்த ஜனாதிபதி வேட்பாளர் ஏற்கிறாரோ அவருக்கு நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவம் செய்யும் முஸ்லிம் கட்சிகள் வாக்களிக்க முன்வரவேண்டும். அவ்வாறு செய்ய முன் வராத கட்சிகளுக்கெதிராக முஸ்லிம்கள் ஜனநாயக வழியில் நின்று மக்கள் போராட்டம் முன்னெடுக்க வேண்டும்

கோட்டாவுக்கு ஆதரவு கொடுக்காத முஸ்லிம் தலைவர்கள் கோட்டா ஆட்சிக்கு வந்தால் என்ன நடக்கும் என சொல்லி பயமுறுத்தினார்களோ அது எதுவும் நடக்கவில்லை. இலங்கை மியன்மார் ஆகும், பள்ளிவாசல் உடையும், அபாயா போட முடியாது, அதான் சொல்ல முடியாது, முஸ்லிம்கள் அமைச்சர் ஆக முடியாது, வெள்ளை வான் கலாச்சாரம் வரும் என்றெல்லாம் சொன்னார்கள். இது எதுவும் நடக்கவில்லை.

கொரோனா காரணமாக மையங்களைப் பலவந்தப்படுத்தி எரித்தனர். இதுதான் கோட்டா அரசு செய்த மிகப்பெரிய பிழை. சமூக சேவை செய்த தவ்ஹீத் ஜமாஅத்துக்களை ஞானசாரரின் பேச்சை கேட்டு தடை செய்தமை. தனிப்பட்ட வகையில் தனக்கு உதவிய கட்சியினரை கோட்டா கவனிக்கவில்லை என்ற பிழையும் நடந்தது. தன்னை பதவிக்கு கொண்டு வந்த மஹிந்தவை, அரசியல் கட்சிகளை ஓரம் கட்டினார். அரசியல்வாதிகளை ஒதுக்கிராணுவத்துக்கு முதலிடம் கொடுத்தார். இவைதான் நடந்தன.

இவை நடக்கும் என யாரும் எதிர்பார்க்கவில்லை. ஆனாலும் ஆட்சியில் உள்ள விமல், உதய கம்மன்பில, சரத் வீரசேகர போன்ற அமைச்சர்கள், அரச ஆதரவு தேரர்கள், எடுத்ததற்கெல்லாம் முஸ்லிம், முஸ்லிம் என சொல்லி மக்களை தவறான பாதையில் இட்டுச்செல்லும் தவறுகளை நிறுத்தி நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முயற்சிக்கும் படி நாம் கட்சி ரீதியில் ஊடக மாநாடு நடாத்திக் கூறினோம்.

நல்லாட்சி போன்று கோட்டா அரசும் ஆட்சி செய்ய வேண்டாம் என பல முறை உபதேசம் செய்தோம். இறுதியில் யாரும் எதிர்பாராத பெற்றோல் டீசல், காஸ் தட்டுப்பாடுதான் ஏற்பட்டது. இறைவனுக்கு பிடிக்காத ஆட்சி முறையினால் இவை ஏற்பட்டன. இதுவே கோட்டாவை நாட்டைவிட்டு வெளியேற்றியது.- என்று தெரிவித்தார்.

### மல்லிகைத்தீவு பஸ் விபத்தில் ஒருவர் காயம்

மூதூர்பொலிஸ் பிரிவிலுள்ள மல்லிகைத்தீவுப் பகுதியில் பயணிகளை ஏற்றிச் சென்ற இலங்கை போக்குவரத்துச் சேவை பஸ் ஒன்று நேற்றுக் காலை பாதையை விட்டு விலகி விபத்துக்கு உள்ளாகியது.

இதில் பயணி ஒருவர் படுகாயமடைந்த நிலையில், மூதூர் தள வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என மூதூர் பொலிஸார் தெரிவித்தனர்.

நீலாப்பொல பகுதியிலிருந்து திருகோணமலை நோக்கிப் பயணிகளை ஏற்றிச் சென்ற மூதூர் போக்குவரத்துச் சாலைக்குச் சொந்தமான பஸ்ஸே இவ்வாறு விபத்துக்கு உள்ளாகியுள்ளது.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மூதூர் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# ஜனாதிபதி வேட்புமனுவை மீளப் பெறத் தயார் நிபந்தனைகளுடன் அநுர குமார அறிவித்தார்!



எதிர்கால அரசியல் நிகழ்ச்சி நிரல் இல்லாத இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களை ஜனாதிபதி மற்றும் பிரதமராக நியமித்தால் ஜனாதிபதி வேட்புமனுவை மீளப் பெறத் தயார் என தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

காலி முகத்திடல் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடும் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். எதிர்கால அரசியல் நிகழ்ச்சி நிரல்களின்றி ஜனாதிபதி மற்றும் பிரதமரை நியமிப்பது தொடர்பாக இணக்கப்பாட்டுக்கு வருவதற்கு அனைத்து அரசியல் கட்சிகளுட னும் பல சுற்று கலந்துரையாடல்களை மேற்கொண்டதாக அவர் இதன்போது தெரிவித்துள்ளார். சில அரசியல் கட்சிகள் இந்த விடயத்தில்ஒருமித்தகருத்துக்குவரஒப்புக்கொண்டாலும் இப்போது அவர்களின் நிலைப்பாடு மாறிவிட்டதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எதிர்கால அரசியல் நிகழ்ச்சி நிரல்களின்றி ஜனாதிபதியையும் பிரதமரையும் நியமித்து குறுகிய காலத்துக்கு சர்வகட்சி அரசாங்கத்தை உருவாக்கி தேர்தலுக்கு செல்வோம் எனத் தாங்கள் அவர்களிடம் முன்மொழிந்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடியைத் தீர்ப்பதற்கு மேற்பார்வையிட அல்லது மத்தியஸ்தம் செய்வதற்கு காலி முகத்திடலில் ஆர்ப்பாட்டக்காரர்களை உள்ளடக்கிய ஒரு சபையை நியமிக்கவும் தாங்கள் முன்மொழிந்ததாக அவர் கூறியுள்ளார்.

அவ்வாறான உடன்பாட்டுக்கு வருவதற்கான முயற்சியை தாங்கள் முற்றாகக் கைவிடவில்லை எனத் தெரிவித்த அவர், அவ்வாறான இணக்கப்பாடு எட்டப்பட்டால் இறுதி நேரத்திலும் வேட்புமனுவை மீளப் பெறத் தயார் எனவும் தெரிவித்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தின் ஊடாக ஜனாதிபதியாவதற்கு முயற்சித்து வருகிறார் எனவும் அவரது நகர்வுகள் தோற்கடிக்கப்பட வேண்டும் எனவும் அவர் இதன்போது அவர் மேலும் தெரி வித்துள்ளார்.

## ரஷ்யா மீதான உலகின் பொருளாதாரத் தடைகள் மூன்றாந்தரப்பு நாடுகளை மண்டியிடவைத்துள்ளன



### பதில் ஜனாதிபதி ரணில் கருத்து

ரஷ்யாவிற்கு எதிராக உலக நாடுகளின் பொருளாதாரத் தடைகள் மூன்றாம் தரப்பு நாடுகளை மண்டியிட வைத்துள்ளன என பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

மேற்கத்திய நாடுகளின் பொருளாதாரத் தடைகளால் ஒருபோதும் ரஷ்யா மண்டியிடாது என்றும் பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டியுள்ளார். ரஷ்யா உடனடியாக போர்நிறுத்தத்துக்கு அழைப்பு விடுக்க வேண்டும் என்றும் நிபந்தனைகள் விதிக்காமல் பேச்சுக்கு உக்ரைன் தயாராக இருக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்த மோதல் காரணமாக முழு உலகையும் பிணைக் கைதிகளாக வைத்திருக்க முடியாது. எனவே உக்ரைன் போர் விரைவில் முடிவுக்கு வர வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

## நடமாடும் எரிபொருள் விநியோக முறைமை நாட்டில் விரைவில்!

### காஞ்சன விஜேசேகர கூறுகிறார்



ஓட்டோக்கள்கள், மின் பிறப்பாக்கிகளுக்கு எரிபொருளை விநியோகிப்பதற்காக நடமாடும் எரிபொருள் விநியோக முறைமையை விரைவில் நாடளாவிய ரீதியில் செயற்படுத்த எதிர்பார்க்கப்படுவதாக அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

எரிபொருள் நிலையங்கள் இல்லாத இடங்களில் ஓட்டோக்கள், மோட்டார் சைக்கிள்களுக்கு பயன்படுத்தப்படும், வகையில் இந்த நடமாடும் எரிபொருள் விநியோக முறைமை விரைவில் நாடளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்தப்படும் என நம்புகின்றோம் என அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## 21 ஆம் திகதி முதல் எரிபொருள் விநியோகம் அதுவரை வரிசையில் காத்திருக்கவேண்டாம்!

எதிர்வரும் 21 ஆம் திகதி முதல் 92 ரக பெற்றோல் மற்றும் ஓட்டோ டீசலை மக்களுக்கு தொடர்ச்சியாக விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை கனிய வள கூட்டுத்தாபனம் குறிப்பிட்டுள்ளது.

எனவே, அதுவரை வாகனங்களுடன் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு முன்பாக வரிசையில் காத்திருக்க வேண்டாம் என மக்களிடம் அந்தக் கூட்டுத்தாபனம் கோரிக்கை விடுத்துள்ளது.

தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ள முறைமைக்கு அமைய, வாகனங்களை வைத்திருப்போர் fuelpass.gov.lk என்ற இணைத் தளத்துக்குள் பிரவேசித்து தேசிய எரிபொருள் அட்டைக்காக பதிவுசெய்து கொள்ளுமாறு கோரப் பட்டுள்ளனர்.



## டலஸுக்கே எனது ஆதரவு! வாசுதேவ திட்டவட்டம்

அடுத்த ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான வாக்கெடுப்பில் நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெருமவுக்கே தனது ஆதரவு என வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

பொதுமக்களின் நலனுக்காக இந்த முடிவு எடுக்கப்பட்டதாக ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

டலஸ் அழகப்பெருமவின் தலைமையில் சர்வகட்சி அரசாங்கம் உருவானால் தற்போதைய நெருக்கடியை ஓரளவுக்கு கட்டுப்படுத்த முடியும் என வாசுதேவ நாணயக்கார நம்பிக்கை வெளியிட்டார்.

## யாழ். மாவட்டத்தில் எரிபொருள் அட்டைக்கே விநியோகிக்கப்படும்

### மாவட்ட செயலர் மகேசன் அறிவிப்பு



யாழ்.மாவட்டத்தில் எரிபொருள் அட்டைக்கே எரிபொருள் வழங்கப்படும் என யாழ்.மாவட்டச் செயலர் க.மகேசன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்–

எரிபொருள் விநியோக ஒழுங்கு முறை தொடர்பில் தேசிய ரீதியிலான வேலைத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட முன்னரே எரிபொருள் அட்டை விநியோகத்தை நாம் ஆரம்பித்துவிட்டோம்.

இப்போது தேசிய ரீதியான வேலைத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது . அதனை நாம் புறக்கணிக்க முடியாது. ஆனாலும், யாழ். மாவட்டத்தில் எரிபொருள் அட்டை தொடர்ந்தும் வழங்கப்பட்டு, அதன் ஊடாக விநியோக ஒழுங்கு தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும். – என்றார்.



## யாழில் வீடு புகுந்து பெற்றோல் திருட்டு!

யாழ். மாவட்ட செயலகத்துக்கு அருகில் உள்ள வீடொன்றில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளில் இருந்து பெற்றோலை இருவர் திருடிக்கொண்டு தப்பி சென்றுள்ளனர்.

மேற்படி வீட்டினுள் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) அதிகாலை 2.30 மணியளவில்நுழைந்தஇருவர், வீட்டினுள்நிறுத்திவைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளில் இருந்து பெற்றோலை திருடிக்கொண்டு தப்பி சென்றுள்ளனர்.

இதையடுத்து காலையில் வீட்டார் எழுந்து மோட்டார் சைக்கிளை இயக்கிய போது மோட்டார் சைக்கிளில் இயங்காத நிலையிலையே பெற்றோல் திருடப்பட்டமை தெரியவந்துள்ளது.

அதன் பின்னர் வீட்டில் பொருத்தியிருந்த பாதுகாப்பு கண்காணிப்பு கமராவில் பரிசோதித்த போது , வீட்டினுள் அத்துமீறி நுழைந்த இருவர் மோட்டார் சைக்கிளில் பெற்றோலை திருடிக் கொண்டு சென்றமை தெரியவந்துள்ளது.

இந்நிலையில் தனது வீட்டினுள் புகுந்து பெற்றோல் திருட்டில் ஈடுபடும் வீடியோ காட்சியை சமூக வலைத்தளங்களில் வீட்டின் உரிமையாளர் பகிர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 15.07.2022இல் வெளியிடப்பெற்றது.